**அன்ரீ லெகோ மீற்றரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்- 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

அன்ரீ லெகோ மீற்றரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல்க் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வாளரின் பரப்பெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக தொகுதியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- கம்பனி ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்,

- கம்பனி தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நடைமுறைக்கணக்கு மீதியானது ரூபா 11,794,411 சாதகமீதியை உள்ளடக்கியிருந்தது. எனினும், முகாமைத்துவமானது அத்தகைய நிதியங்களை குறுகிய காலத்தில் வட்டி வருமானம் ஈட்டுகின்ற மூலமொன்றில் முதலிடுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | நாங்கள் மிகை நிதியங்களை வைத்திருக்கும் போது நிலையானவைப்புக் கணக்கிற்கோ அல்லது மீள்கொள்வனவு (றெபோ) உடன்படிக்கைகளிலோ முதலீடு செய்யப்பட வேண்டும். மேலதிக நிதியங்களைப் பெற்ற பின்னர் 2020 சனவரி 03 இல் ரூபா 35,000,000.00 ஐ றெபோக்களில் 10 நாட்களிற்காக நாங்கள் முதலிட்டோம். | மிகையான பணம் வினைத்திறனாக முதலிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 71,966,012 மில்லியன் தொகையான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த நட்டமானது ரூபா 40,009,623 தொகையாகவிருந்தது. நிதிவிளைவுகளில் ரூபா 111,975,635 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீற்றர்களின் விற்பனை வருமானது ரூபா 367,342,546 ஆல் அதிகரித்தமை நிதிசார்விளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 2.2 போக்கு பகுப்பாய்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான மற்றும் செலவீனவிடயங்களின் அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதம் பின்வருமாறுள்ளது.

| வருமானம்/செலவீனம் | 2019 | 2018 | அதிகரிப்பு/ குறைவு | சதவீதம் % |
|---|---|---|---|---|
| வருமானம் | 1,250,543,858 | 883,201,312 | 367,342,546 | 41.59 |
| விற்பனைக்கிரயம் | 1,137,339,207 | 890,783,351 | 246,555,856 | 27.68 |
| நிர்வாகக்கிரயம் | 23,023,217 | 34,640,526 | (11,617,309) | 33.54 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 367,342,546 ஆலும் விற்பனைக்கிரயம் ரூபா 246,555,856 ஆலும் அதிகரித்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டில் புதிய ஸ்மாட் மீற்றரின் தர உறுதிப்படுத்தலுக்காக ரூபா 10,394,730 கிரயத்தை ஏற்படுத்தியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது நிர்வாகக்கிரயம் ரூபா 11,617,309 ஆல் குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவலின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | 2018 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 9.05 | -0.86 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1:1.73 | 1:1.65 |

மீற்றர் விற்பனை ரூபா 367,342,546 ஆல் அதிகரித்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்த இலாப விகிதம் 9.91 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பண்டாரகமவிலுள்ள வணிக இடங்களை வேலைக்கமர்த்துவதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சாரக்கம்பனியுடன் (தனியார்) | அன்ரீ லெகோ மீற்றரிங் கம்பனி மற்றும் இலங்கை மின்சாரக்கம்பனி (தனியார்) போன்றன | காலதாமதமில்லாமல் வாடகை உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையான உடன்படிக்கை இருந்திருக்கவில்லை. எனினும், கம்பனியானது அத்தகைய சொத்தின் பயன்பாட்டில் எந்தவொரு சட்ட உரிமைமையை கொண்டிருக்காதபோதும் சொல்லப்பட்ட இடங்களில் அதனுடைய செயற்பாடுகளை முழுமையாக ஸ்தாபித்திருந்தது. | 2020 ஆகஸ்ட் 25 இல் முறையான உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டிருந்தது. | |
| (ஆ) | பயன்பாட்டிலுள்ள சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலத்தை முகாமைத்துவமானது முறையாக மதிப்பிட்டிருக்கவில்லை. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிலுள்ள ரூபா 60,439,266 தொகையான கம்பனியானது முழுமையாக பெறுமானத்தேய்வு செய்திருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போர்து முழுமையாக பெறுமானத்தேய்வுசெய்யப்பட்ட சொத்துக்களை மீளமதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத்தேய்வுசெய்யப்பட்ட சொத்துக்களை மீளமதிப்பீடு செய்வதற்கும் காலதாமதமில்லாமல் கணக்கிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியானது பெறுகைத்திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு காலஇடைவெளிகளிற்கும் பெறுகைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு | கம்பனியானது எஸ்ஓஆர்பி ஐ வடிவமைப்பதற்கு அனுப்பியுள்ளதுடன் இந்தத்திட்டமானது 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பூர்த்தியாக்கப்படும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பதவியுயர்வுகள் திட்டமொன்று (எஸ்ஓஆர்பி) கம்பனியிடம் காணப்படவில்லை. | | |
| (ஆ) | கம்பனியிடம் விரிவான கட்டுப்பாட்டு மற்றும் நிர்வாக செய்முறைகள் கையேடு இருக்கவில்லை. | நிர்வாகச்செய்முறை கையேடு 2021 ஆம் ஆண்டினுள் கிடைக்கக்கூடியதாகவிருக்கும். | நிர்வாகச்செய்முறை கையேட்டை தயாரிப்பதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்கணிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையினால் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியானது 5 வருடங்களிற்காக கூட்டிணைந்த திட்டமொன்றையும் வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டமொன்றையும் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரித்திருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை பின்பற்ற வேண்டும். |

### 4.2 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகளினை கம்பனி பாராளுமன்றத்திற்கு சமர்த்திருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை பின்பற்ற வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியானது 2020 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை வெளியிலிருந்து வேலைக்கமர்த்தியிருந்ததுடன் இது தற்போது வருடாந்த கணக்காய்வுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தற்போது மேற்கொள்கின்றது. | உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.4 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழுவொன்றை கம்பனி உருவாக்கியிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின்போது கணக்காய்வு குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை பின்பற்ற வேண்டும். |

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க வருடாந்தப் பாதீடு பாதிடப்பட்ட வருமான மற்றும் செலவினக் கூற்றொன்றையும், ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றொன்றையும், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றொன்றையும் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றுடன் பாதிடப்பட்ட மூலதன செலவின கூற்றொன்றையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி அந்த தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | இயக்குனர் சபையால் அனுமதிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்காக மூலதன செலவின கூற்று, பாதிடப்பட்ட வருமான மற்றும் செலவினக் கூற்றொன்றையும் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றொன்றையும், கம்பனியானது தயாரித்திருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை பின்பற்ற வேண்டும். |

4.6 **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டீஜி) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களும், அதன் பரப்பின் கீழ்க் காணப்படும் இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளின் அமுல்படுத்தலில் பங்களிப்புச் செய்தல் வேண்டும். ஆனால், கம்பனி எஸ்டீஜீ பற்றி அறிந்திருக்காததுடன் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்கள், அந்த இலக்குகளினை அடைந்து கொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயலாற்றலினை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகளைக் கூட இனங்கண்டிருக்கவில்லை. | அன்ரீ லெகோ மீற்றரிங் கம்பனிக்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2021 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ ஏற்பாடுகளினைக் கம்பனி பின்பற்றுதல் வேண்டும். |